நாள்: 08.07.2014

**இன்றைய வேளாண் செய்திகள்**

தினமலர்

**<u>மகிழ்ச்சி !: வேர்க்கடலை பயிரிட்ட விவசாயிகள்... : காய் பிடிக்கும் தருணத்தில் பெய்தது மழை</u>**

**ஆர்.கே.பேட்டை:** மானாவாரியாக பயிரிடப்பட்டிருந்த வேர்க்கடலை, கோடையால், காய் பிடிக்கும் தருணத்தில் வாடி கிடந்தது. இந்நிலையில், இரண்டு நாட்களுக்கு முன் பெய்த மழையால், வேர்க்கடலை வயலில் தண்ணீர் தேங்கி கிடக்கிறது. இதனால், காய்களுக்கு வேண்டிய தண்ணீர் கிடைத்துள்ளது என, விவசாயிகள் மகிழ்ச்சி தெரிவித்து உள்ளனர்.

வானத்தை நம்பி...

திருவள்ளூர் மாவட்டத்தில், திருத்தணி, ஆர்.கே.பேட்டை, பள்ளிப்பட்டு உள்ளிட்ட மலை சார்ந்த வறட்சியான நிலப்பகுதியில், வானத்தை நம்பி, கோடையில் வேர்க்கடலை பயிரிடப்படுகிறது.

கடந்த ஏப்ரலில், 98 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் வேர்க்கடலை பயிரிடப்பட்டுள்ளது. 60 நாள் வளர்ச்சி கண்டுள்ள செடிகள், தற்போது பூ பூத்துள்ளன. இது, காய் பிடிக்கும் தருணம்.

சாதாரணமாக செடிகள் வளர்ச்சிக்கு அதிக தண்ணீர் தேவையில்லை. ஆனால், பூ பூத்து, காய் பிடிக்கும் தருணத்தில் தண்ணீர் மிகவும் அவசியமாகிறது. காய் பிடிக்கும் நேரத்தில் தண்ணீர் இருந்தால் மட்டுமே, அதிக விளைச்சல் இருக்கும். தண்ணீர் இல்லாவிட்டால், செடிகளில் காய்களின் எண்ணிக்கை குறையும்.

பிஞ்சுக்குள் 'ஈரம்'

பருப்பு, உரிய அளவில் இருக்காது. வேர்க்கடலையின் பிஞ்சு பருவத்தில்

காய்களில் அதன் வளர்ச்சிக்கு தேவையான தண்ணீர் சேமித்து வைக்கப்படுகிறது. இளம் பிஞ்சுகளை உடைத்தால் அதிலிருந்து தண்ணீர் வெளியேறும். இந்நிலையில், இரண்டு தினங் களுக்கு முன் இரவு முழுவதும் திருத்தணி, ஆர்.கே.பேட்டை, பள்ளிப் பட்டு ஒன்றியங்களில் விடியவிடிய மழை பெய்தது. இதனால், வயல்வெளிகளில் தண்ணீர் தேங்கியுள்ளது. காய் பிடிக்கும் தருணத்தில், வேர்க்கடலை வயலில் தேங்கியுள்ள தண்ணீர், காய்கள் வளர்ச்சிக்கு, பெரிதும் உதவும்.

இதுகுறித்து, வேலன்கண்டிகையைச் சேர்ந்த விவசாயி வேலு கூறுகையில், 'நேற்று முன்தினம் பெய்த மழை, வேர்க்கடலை பயிருக்கு பால் வார்த்தது போன்றது. வானத்தை நம்பி வேர்க்கடலை பயிரிட்ட விவசாயிகள், இதனால், பெரிதும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். இனி, 30 நாட்களுக்கு பின், காய் பறிப்பு நேரத்தில் லேசான மழை பெய்தால் போதும்' என்றார்.

**வைகாசிப் பட்டத்தில் பாகல் சாகுபடி அதிகரிப்பு : விருத்தாசலம் பகுதியில் விவசாயிகள் ஆர்வம்**

விருத்தாசலம்: விருத்தாசலம் பகுதி விவசாயிகள் வைகாசிப் பட்டத்தில் அதிகளவில் பாகல் சாகுபடி செய்துள்ளனர். விருத்தாசலம், புதுக்கூரைப்பேட்டை, கச்சிராயநத்தம் உட்பட பல பகுதி விவசாயிகள் வைகாசிப் பட்டத்தில் நான்கு மாதப் பயிரான பாகல் சாகுபடி செய்துள்ளனர். இதில், பாகல் -1, பி.எஸ்.எஸ் -1, யு.எஸ் - 390 ஆகிய உயர் ரகங்களை சாகுபடி செய்துள்ளனர். ஆடி, தை பட்டங்களை விட வைகாசிப் பட்ட சாகுபடி கூடுதல் லாபம் தருவதால், விவசாயிகள் அதிகளவில் சாகுபடி செய்துள்ளனர்.

தோட்டக்கலை உதவி இயக்குனர் மணிமொழி கூறுகையில், "ஆடி, தைப் பட்டங்களில் விதைக்கத் தேவையான பாகல், புடல், பீர்க்கன் விதைகள் அந்தந்த பகுதியில் உள்ள வேளாண் அலுவலகங்களில் இருப்பு வைக்கப்பட்டுள்ளன. தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தில் 100 சதவீதம் மானியத்திலும், ஒருங்கிணைந்த தோட்டக்கலை இயக்கத்தில் 50 சதவீதம் மானியத்திலும் விதைகள் வழங்கப்படுகின்றன. மேலும் தோட்டக்கலைப் பயிர்களுக்குத் தேவையான பந்தல் அமைக்க, தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தில் இரண்டரைஏக்கருக்கு

ஒன்றரைலட்சம் ரூபாய் வரைமானியம் வழங்கப்படுகிறது. நிரந்தரபந்தல் அமைத்தால் ஆண்டு முழுவதும் பாகல், புடலை, அவரை, பீர்க்கன் போன்றவற்றை தொடர்ந்து சாகுபடி செய்யலாம். பாகல் சாகுபடியில் ஏக்கருக்கு ஒன்றரைலட்சம் நிகரலாபம் கிடைக்கும்' என்றார்.

**<u>கடலில் மீன் வரத்து குறைந்ததால் விலை... : கேள்விக்குறியாகும் மீனவர்கள் வாழ்வாதாரம்</u>**

**கடலூர்** : கடலூர் முதுநகரில் மீன் வரத்து குறைந்து வருவதால் மீனவர்கள் வாழ்வாதாரம் கேள்விக்குறியாகி வருகிறது. நவீன தொழில் நுட்பத்துடன் தயாரிக்கப்படும் சுருக்கு வலையால் கடலில் உள்ள அனைத்து ஜீவராசிகளையும் அறவே பிடித்து வருவதால் கடல் வளம் நாளுக்கு நாள் குறைந்து வருகிறது. கடல் வளத்தைப் பெருக்க அரசு பெரு முயற்சி மேற்கொண்டு வருகிறது.

மீன்கள் முட்டையிட்டு இனப்பெருக்கம் செய்யும் கோடை காலத்தில் சுருக்கு வலையால் முட்டைகள் அழிந்து விடும் என்பதற்காக 40 நாட்கள் மீன்பிடி தடைக்காலம் அமல்படுத்தப்படுகிறது. இந்த ஆண்டு தடைக்காலம் முடிந்ததும் ஓரிரு நாட்கள் மட்டுமே மீன் பாடு இருந்தது.

கடந்த 10 நாட்களாக மீன் வரத்து முற்றிலும் நின்று போனது. கடலில் ஒரு வாரம் தங்கி மீன் பிடித்து வரும் பெரிய படகுகளுக்கு போதிய அளவு மீன்கள் கிடைப்பதில்லை. கடலில் சென்று வருவதற்கான டீசல் பணத்திற்கு கூட மீன் கிடைப்பதில்லை. ஒரு வாரம் மீன்பிடிக்கச் செல்லும்போது ஒரு நாள் மட்டுமே மீன்கள் கிடைக்கிறது.

பெரிய படகுகளின் நிலை இப்படி என்றால்; தினமும் சென்று வரும் படகுகள் சிறிய அளவிலான மீன்களை கொண்டு வருவது சற்று ஆறுதலான விஷயமாக உள்ளது. கடந்த ஒரு வாரமாக இதே நிலை நீடித்து வருவதால் படகுத்துறை வெறிச்சோடி காணப்பட்டது. கடலூர் முதுநகரில் இருந்து 20 வாகனங்களில் மீன் ஏற்றிச்செல்லும் இடத்தில் தற்போது ஒன்றிரண்டு வாகனங்களுக்குக் கூட மீன்பாடு இல்லை. இதனால் மீனவர்கள் வேதனையில் உள்ளனர்.

இதன் காரணமாக சாதாரணமாக கானாங்கழுத்தை மீன் விலை ஒரு கிலோ 120 ரூபாயிலிருந்து 170 ரூபாயாக உயர்ந்துள்ளது. சங்கரா மீன் பெரியது 120

விற்பனையானது தற்போது 180 வரைஉயர்ந்துள்ளது. இதேப்போன்று தொடர்ந்து நீடித்தால் மீனவர்களின் வாழ்வாதாரம் கேள்விக்குறியாகும் நிலை ஏற்படும்.

இது குறித்து மீன்பிடி படகு உரிமையாளர் பிரசாத் கூறியதாவது:

கடலில் முன்பு போல மீன்கள் கிடைப்பதில்லை. கரையோரத்தில் வழக்கமாக கிடைக்கக்கூடிய மீன்கள் கிடைப்பது அரிதாக உள்ளது. கடலில் 5 நாட்கள் தங்கி மீன்பிடிக்கும் படகுகளுக்கு 1.50 லட்ச ரூபாய் டீசல் தேவைப்படும். 80 முதல் 100 பார் ஐஸ், 5,000 ரூபாய் உணவு பொருட்கள் தேவைப்படுகிறது. ஆனால், அந்த அளவுக்கு மீன்கள் கிடைப்பதில்லை. தற்போது கேரளா மாநிலத்தில் மீன்பிடி தடைக்காலம் அமலில் உள்ளது. அதனால் மீன் விலை உயர்ந்துள்ளது. ஏற்கனவே விற்பனை செய்த விலையில் 30 சதவீதம் கூடுதலாகி உள்ளது. அதனால் குறைந்த மீன்கள் கிடைத்தால் கூட செலவு செய்த அளவுக்கு வருமானம் கிடைக்கிறது. கேரளாவில் தடைக்காலம் நீங்கினால் மீன்கள் கடலூருக்கு விற்பனைக்காக வரவழைக்கப்படும். அதனால் மீன்கள் விலை கனிசமாக குறையும்.

இவ்வாறு அவர் கூறினார்.

**மக்காச்சோள அறுவடை இயந்திரங்கள் பயனற்று கிடக்கும் அவலம்**

**கள்ளக்குறிச்சி**: கள்ளக்குறிச்சி மார்க்கெட் கமிட்டியில் மக்காச்சோளம் அறுவடை இயந்திரங்கள் பயனற்று கிடக்கிறது. கள்ளக்குறிச்சி மார்க்கெட் கமிட்டிக்கு வேளாண் பொறியியல் துறை சார்பில் கடந்த 2012ம் ஆண்டு தலா 83 ஆயிரம் ரூபாய் மதிப்பில் இரு மக்காச்சோள அறுவடை இயந்திரங்கள் அளிக்கப்பட்டன.

அறுவடை பணிக்கு ஒரு மணி நேரத்திற்கு 96 ரூபாய் வாடகையில் இந்த இயந்திரங்கள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன. இந்த இயந்திரங்களை தனியாக டிராக்டர் வைத்து இழுத்துச் செல்ல வேண்டும். கள்ளக்குறிச்சி வந்து எடுத்து சென்று, திரும்ப ஒப்படைக்க பல மணி நேரவாடகை தர வேண்டும் என்பதால் விவசாயிகள் தயங்கினர். நவீன தொழில்நுட்பத்துடன் எளிதில் மக்காச்சோளத்தை அறுவடை செய்யும் இயந்திரங்கள் தனியாரிடம் கிடைக்கத் துவங்கியதால் இந்த வாகன பயன்பாடு முற்றிலும் குறைந்தது. பல ஆயிரம் ஏக்கர் விவசாய நிலத்தில் மக்காச்சோளம் சாகுபடி செய்து அறுவடைப்பணிகள் நடக்கும் நிலையில் அறுவடை இயந்திரங்கள் மூலம் 12 ஆயிரத்து 916 ரூபாய் மட்டுமே வாடகை

கிடைத்துள்ளது. மார்க்கெட் கமிட்டி வளாகத்தில் ஒரு லட்சத்து 66 மதிப்பிலான இயந்திரங்கள் மக்கிப் போகும் நிலை உள்ளது.

**குறைந்த மூங்கில் கூடை விற்பனை: உற்பத்தியாளர்கள் கலக்கம்**

**கிருஷ்ணகிரி**: கிருஷ்ணகிரி மாவட்டத்தில், மா மற்றும் தென்னை அறுவடையின் போது பயன்படுத்தும் மூங்கில்களால் செய்யப்படும் கூடைகள் விற்பனை, பிளாஸ்டிக் கூடைகள் வரத்தால் குறைந்துள்ளதால், கூடை உற்பத்தியாளர்கள் கலக்கத்தில் உள்ளனர்.கிருஷ்ணகிரி மாவட்டத்தில், தமிழகத்தில் அதிக பரப்பில் மாவும் மற்றும் ஈரோடு மாவட்டத்துக்கு அடுத்தப்படியாக தென்னையும் பயிரிடப்படுகிறது. மா மற்றும் தென்னை மரங்களில் அறுவடை காலத்தில், அவற்றை லாரி மற்றும் வாகனங்களில் ஏற்ற மூங்கில் கூடைகள் அதிக அளவில் பயன்பட்டு வந்தது.கிருஷ்ணகிரி நகரில் மட்டும் மூங்கில் கூடைகள் உற்பத்திசெய்யும், 25க்கும் மேற்பட்ட குடும்பங்கள், பாப்பாரப்பட்டி மற்றும் பூந்தோட்டம் பகுதியில் குடியிருந்து வருகின்றனர். இவர்கள் கடந்த, 50 ஆண்டுகளுக்கு மேல் கூடை முடையும் தொழில் செய்து வருகின்றனர். சில ஆண்டுகளுக்கு முன், கிருஷ்ணகிரியில் முடையும் கூடைகளுக்கு, ஆந்திரா மற்றும் மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்களில் நல்ல வரவேற்பு இருந்ததால், வெளி மாநில வியாபாரிகள் அதிக அளவில் கிருஷ்ணகிரிக்கு வந்து மூங்கில் கூடைகளை வாங்கி செல்வர்.திருவண்ணாமலை, கடலூர், விழுப்புரம், வேலூர் ஆகிய அண்டை மாவட்டங்களை சேர்ந்த வியாபாரிகளும், கிருஷ்ணகிரிக்கு வந்து மூங்கில் கூடைகளை அதிக அளவில் வாங்கி செல்வர். வெளி மாவட்டங்களில், கிருஷ்ணகிரியில் முடையும் மூங்கில் கூடை, மக்களிடம் தனி வரவேற்பை பெற்றுள்ளது.தற்போது, இந்தியாவில் உள்ள அனைத்து நகரங்கள் மற்றும் கிராமங்களிலும் பிளாஸ்டிக்காலான வீட்டு உபயோக பொருட்களையே உபயோகிக்கின்றனர். மேலும், விவசாய தேவைக்கும், பிளாஸ்டிக்காலான கூடைகளை பயன்படுத்த துவங்கி விட்டனர். மூங்கில்களால் செய்யப்படும் கூடைகளுக்கு வரவேற்பு குறைந்து, வியாபாரம் குறைந்து கொண்டே வருகிறது. இதனால், கூடை முடைதல் தொழில் செய்து வந்த குடும்பங்கள், தற்போது வறுமையில் வாடி வருகின்றனர்.இதுகுறித்து, கிருஷ்ணகிரி பூந்தோட்டத்தில்,

கூடை முடைதல் தொழில் செய்யும் ராஜா கூறியதாவது:நாங்கள் கிருஷ்ணகிரியில் கடந்த, 50 ஆண்டுகளுக்கு மேலாக கூடை முடைதல் தொழிலில், சுமார், 25 குடும்பங்கள் ஈடுபட்டு வருகிறோம். இதுபோன்று, மாவட்டத்தில், ஆயிரக்கணக்கானோர் கூடை முடைதல் தொழில் செய்து வருகின்றனர். நாங்கள் கூடை முடைதலுக்கான மூங்கில்களை, ஓசூர், தேன்கனிக்கோட்டை, தளி ஆகிய பகுதியில் இருந்து வனத்துறை மற்றும் தனியாரிடம் இருந்து வாங்கி வந்து தொழில் செய்து வருகிறோம். சில ஆண்டுகளுக்கு முன், மூங்கில் கூடைகளின் தேவைகள் அதிகம் இருந்ததால், அதிக அளவில் கூடைகள் உற்பத்தி செய்து நல்ல வருவாய் கிடைத்து வந்தது.தற்போது, பிளாஸ்டிக் பொருட்களின் பயன்பாட்டால் மூங்கில் கூடைகளின் தேவைகள் குறைந்து விட்டதால், உற்பத்தியும் வெகுவாக பாதிப்படைந்து உள்ளது. மேலும், கோடை காலங்களில் மாற்று தொழிலாக மூங்கில்களாலான விசிறி செய்து விற்பனை செய்தாலும், அதன் விற்பனையும் வெகுவாக குறைந்து விட்டது. இதனால், அதிலும் நஷ்டம் ஏற்பட்டது.நாளொன்றுக்கு அதிகபட்சமாக, இரண்டு முதல், நான்கு கூடைகள் தான் உற்பத்தி செய்ய முடியும். இதில், ஒரு கூடை, 70 ரூபாயில் இருந்து, 110 ரூபாய் வரை விற்பனையானால் தான், நாள் கூலியாக எங்களுக்கு, 80 ரூபாய் கிடைக்கும். இதனை, வைத்து தான், எங்கள் குடும்பத்தை காப்பாற்ற வேண்டியுள்ளது. தற்போது, மூங்கில் கூடைகளின் தேவைகள் குறைந்து கொண்டே வருவதால், கூடை முடியும் தொழில் நசிந்து வருகிறது, என்றார்.

**வேளாண் விளை பொருள் ரூ.1.40 கோடிக்கு ஏலம்**

அந்தியூர்: வேளாண் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்துக்கு, நேற்று அந்தியூரின் சுற்று வட்டாரப்பகுதி மற்றும் கர்நாடக மாநிலத்தில் இருந்தும், விவசாயிகள் விற்பனைக்காக பருத்தி, தேங்காய், எள், மக்காச்சோளம் ஆகிய விளைபொருட்களை கொண்டு வந்திருந்தனர்.

பருத்தியில், பி.டி., ரகம், 6,000 மூட்டைகள் விற்பனைக்காக கொண்டு வரப்பட்டிருந்தது. ஒரு குவிண்டால், 4,800 முதல் அதிகபட்ச விலையாக, 5,300 ரூபாய் வரை ஏலம் கூறப்பட்டு, 1.20 கோடி ரூபாய்க்கு விற்பனை ஆனது. மேலும், 32 ஆயிரம் தேங்காய், தலா, ஐந்து முதல், 15 ரூபாய் வரையிலான விலையில்,

நான்கு லட்சம் ரூபாய்க்கும், கொப்பரை தேங்காய், 150 மூட்டைகள், கிலோ ஒன்று, 90.91 முதல், 94.57 ரூபாய் வரை, நான்கு லட்சம் ரூபாய்க்கும் விற்பனையானது.

வெள்ளை மற்றும் கருப்பு ரக எள், 120 மூட்டைகள், கிலோ ஒன்றுக்கு, வெள்ளை ரகம், 89.89 முதல்,105.69 ரூபாய் வரை, 12 லட்சம் ரூபாய்க்கும், மக்காச்சோளம், பத்து மூட்டை, கிலோ ஒன்றுக்கு, 13.61 ரூபாய் என, பத்தாயிரம் ரூபாய்க்கும், மொத்தம், ஒரு கோடியே, 40 லட்சத்து, பத்தாயிரம் ரூபாய்க்கு வேளாண் பொருட்கள் விற்பனை நடந்தது. இத்தகவலை, விற்பனைக்கூட கண்காணிப்பாளர் சுப்புராமன் தெரிவித்தார்.

**சாதனை விவசாயிகளுக்கு கலெக்டர் பாராட்டு**

திண்டுக்கல்: விவசாய சாகுபடியில் சாதனை படைத்த விவசாயிகளை கலெக்டர் வெங்கடாசலம் பாராட்டினார். உணவு பொருட்களின் உற்பத்தியை அதிகரிப்பதற்காக, தோட்டக்கலைத்துறை சார்பில் சாகுபடியில் சாதனை படைக்கும் விவசாயிகளுக்கு மாவட்ட அளவில் பரிசுகள் வழங்கப்படுகின்றன. இதில் பங்கேற்கும் விவசாயிகள் தங்கள் பெயரை முதலில் பதிவுசெய்ய வேண்டும். அதிகாரிகள் முன்னிலையில் அறுவடை செய்யப்பட்டு, மதிப்பீடு செய்யப்படும். கடலை சாகுபடியில் முதலிடத்திற்கு ரூ.15 ஆயிரம், இரண்டாம் இடத்திற்கு ரூ.10 ஆயிரம் வழங்கப்படுகிறது. மக்காசோளம் சாகுபடியில் முதலிடத்திற்கு ரூ.10 ஆயிரம், இரண்டாம் இடத்திற்கு ரூ.5 ஆயிரம் வழங்கப்படுகிறது.திண்டுக்கல் மாவட்டத்தில் கடலை சாகுபடியில், வேடசந்தூர் அருகே தொட்டணம்பட்டியை சேர்ந்த விவசாயி அய்யப்பன் முதலிடம் பிடித்துள்ளார். காமணம்பட்டியை சேர்ந்த சுப்பையா இரண்டாம் இடம் பிடித்துள்ளார். அதேபோல், மக்காளச்சோளம் சாகுபடியில், பழநி பாலசமுத்திரத்தை சேர்ந்த ராமசாமி முதலிடத்தை பிடித்துள்ளார். அதே பகுதியை சேர்ந்த ராம்குமார் இரண்டாம் இடம் பிடித்துள்ளார். சாதனைபடைத்த விவசாயிகளுக்கு கலெக்டர் வெங்கடாசலம் பரிசுகளை வழங்கி பாராட்டினார்.

**காவிரி- வைகை -குண்டாறு இணைப்புக்கால்வாய் திட்டம்: 8 லட்சம் ஏக்கர் விவசாயம் பயன்பெறும்**

காவிரி - வைகை - குண்டாறு இணைப்புக் கால்வாய் திட்டம் நிறைவேறினால், தென்மாவட்டங்களில் 8 லட்சம் ஏக்கர் விவசாய நிலங்கள் பயன்பெறும். இத்திட்டத்திற்கு பிரதமர் நரேந்திர மோடி நிதி ஒதுக்குவார் என்ற எதிர்பார்ப்பு விவசாயிகளிடம் மேலோங்கி உள்ளது.தமிழகத்தில் பெரும்பாலான பகுதிகளில், விவசாயம் "வானம் பார்த்த பூமியாகவே' இருந்து வருகிறது. முக்கியமாக ராமநாதபுரம், சிவகங்கை, விருதுநகர், புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்கள் உள்ளன. தொடர்ந்து பருவமழை பொய்ப்பு, வறண்ட கண்மாய்கள், அதலபாதாளத்தில் சென்று விட்ட நிலத்தடி நீர் என தண்ணீரின் தேவை அதிகரித்துள்ளது.இதற்கு நடுவே கருவேல மரங்கள் காற்றில் உள்ள ஈரப்பதத்தை உறிஞ்சி விடுகிறது. வங்கக்கடலில் தொடர்ந்து புயல் சின்னங்கள் உருவானாலும், வறண்ட வானிலை காரணமாக மழை இன்றி வறட்சி தாண்டவமாடி வருகிறது. 1.50 லட்சம் கன அடி நீர் வீண்தமிழகத்தில் குறைந்த மழையளவே இருப்பினும், மேற்கு தொடர்ச்சி மலையின் காரணமாக, கர்நாடகத்தில் பெய்யும் மழைநீரை மேட்டூரில் தேக்கி, காவிரியில் தண்ணீர் திறந்து விடப்படுகிறது. காவிரியில் வெள்ள அபாயத்தை தவிர்த்து, கரையோர மக்களையும், விவசாயிகளையும் காக்க, கொள்ளிடம் ஆறு மூலம் தண்ணீர் திறந்து விடப்பட்டு, வீணாக கடலில் கலக்கிறது.ஒவ்வொரு ஆண்டும் கடலில் கலக்கும் நீரின் அளவு, வினாடிக்கு ஒன்றரை லட்சம் கனஅடி. கடந்த ஆண்டுகளில் இதன் அளவு, 4 லட்சம் கனஅடியாக உயர்ந்து, வீணாக கடலில் கலந்ததால், விவசாயிகளுக்கு வருமான இழப்பு இயற்கையாகவே ஏற்பட்டது.கடந்த 1958ல் காவிரி - வைகை -குண்டாறு இணைப்புக் கால்வாய் திட்டத்திற்கு, 189 கோடி ரூபாய் திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, அன்றைய முதல்வர் காமராஜர் தலைமையில் அடிக்கல் நாட்டு விழா நடந்தது. இது, தொடர்ந்து 56 ஆண்டுகள் கிணற்றில் போட்ட கல்லாக இருக்கிறது.கடந்த 2009ல் மாயனூர் கட்டளைக் கதவணையிலிருந்து, இத்திட்டத்திற்கு 3,290 கோடி ரூபாய் திட்ட மதிப்பீடு செய்யப்பட்டு, பொதுப்பணித்துறையால் தயார் செய்யப்பட்டது. இந்த மதிப்பீடு தொகை 2011ல்,

5,600 கோடியாக அதிகரித்தது.இதற்காக புதுக்கோட்டை மாவட்டத்தில் ஏராளமான போராட்டங்கள் நடந்தன. ஆனால் ராமநாதபுரம், சிவகங்கையில் போதுமான கவனம் செலுத்தப்படவில்லை.காவிரி - வைகை - குண்டாறு இணைப்பு திட்ட விபரம்:சேலம் மாவட்டம் மேட்டூர் அணையில் இருந்து கீழ்புறம் 138 கி.மீ., துாரத்தில் மாயனுார் உள்ளது. மாயனுாரில் இருந்து 20 மீ., அகலம் உள்ள இணைப்பு கால்வாய் வெட்டப்படும். இது 256 கி.மீ., நீளமுள்ள, விருதுநகர் மாவட்டம், காரியாபட்டி தாலுகா புதுப்பட்டி கிராமத்தில், குண்டாறுடன் இணைக்கப்படும்.காவிரி, கொள்ளிடம் உபரி நீரில் 2252 மில்லியன் கனமீட்டர் தண்ணீர், மாயனுார் - கட்டளை கதவணையில் இருந்து, பாசனத்திற்காக இணைப்புக் கால்வாய்களில் திருப்பி விடப்படும். இதன் மூலம் 15 சிற்றாறுகள் வழியாக, மொத்தம் 3 லட்சத்து 37 ஆயிரத்து 717 எக்டேர் (8 லட்சம் ஏக்கர்) பயன்பெறும். கனவு நிறைவேறுமாநதிநீர் இணைப்பு திட்டம்,
அரசியல்வாதிகளின், வெறும் வாய்ச்சொல்லாக மட்டுமே இருந்துவந்தது. இத்துடன் நீருக்காக கர்நாடகம், ஆந்திராவை எதிர்நோக்கி நிற்கும் சூழல் தொடர்கிறது. இதனால் 2008 - 2009ல் காவிரி - வைகை -குண்டாறு இணைக்கும் திட்டம், அப்போதைய முதல்வர் கருணாநிதியால், 3290 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்படும் என அறிவிக்கப்பட்டது.இம்முயற்சியை தீவிரப்படுத்த 2013 பிப்ரவரி முதல், காவிரி - வைகை - குண்டாறு இணைப்பு கால்வாய் நீர்பாசன விவசாயிகள் சங்கம் ஏற்படுத்தப்பட்டது. இதன் மூலம் தொடர்ந்து அனைத்து பகுதி விவசாயிகள், சமூக ஆர்வலர்களை கூட்டி இது குறித்து விளக்கம் அளிக்கப்பட்டு வருகிறது.முதல்வர் ஜெ., ஜூன் 4 ம் தேதி, பிரதமர் நரேந்திர மோடியை சந்தித்து, 64 பக்கங்கள் கொண்ட கோரிக்கை மனு ஒன்றை கொடுத்தார். இதில் தமிழகத்திற்கு ரூ. 3.54 லட்சம் கோடி மதிப்பிலான திட்டத்திற்கு நிதி கோரினார். இம்மனுவில் காவிரி - வைகை - குண்டாறு இணைப்புக்கு 5,166 கோடி ரூபாய் கேட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. இக்கோரிக்கை ஏற்கப்படும் நிலையில், நதி இணைப்பு திட்டம் சாத்தியமாகும்.காவிரி - வைகை - குண்டாறு இணைப்பு கால்வாய் நீர்பாசன விவசாயிகள் சங்க பொதுச்செயலாளர் எம்.அர்ச்சுனன் : மன்னர் காலத்தில் தீட்டப்பட்ட திட்டம், இன்று செயல்வடிவம் பெறும் நிலையில்,

வானம் பார்த்த பூமி என்ற நிலை மாறும். 1954 மே 5 ல், புதுக்கோட்டை எம்.பி., க.முத்துச்சாமி வல்லத்தரசு இது குறித்து பேசினார். 1958 ல் அரசு திட்டத்தை துவக்கி, முதல்வர் காமராஜர் அடிக்கல் நாட்டினார். தொடர்ந்து திட்டம் செயல்படாமல் கிடப்பில் இருந்து வருகிறது. தற்போது ஏழு மாவட்ட விவசாயிகள் ஒன்றிணைந்து கூட்டமைப்பை ஏற்படுத்தி, இத்திட்டம் நிறைவேற பல்வேறு கருத்தரங்குகளை நடத்தி வருகிறோம்.திட்டம் செயல்படும் நிலையில், லட்சக்கணக்கான மக்களின் குடிநீர் தேவை பூர்த்தியடைவதுடன், பல லட்சம் ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெற்று, பொருளாதார வளர்ச்சி மேலோங்கும், என்றார்.குண்டாறு ஆரம்பிக்கும் இடம்குண்டாறு**,** மேற்கு தொடர்ச்சி மலையில் தொட்டப்பநாயக்கனூரில் தொடங்கி**,** மதுரை மாவட்டம் உசிலம்பட்டி**,** பேரையூர்**,** திருமங்கலம்**,** காரியாப்பட்டி வழியாக ராமநாதபுரம் மாவட்டம் கமுதி அருகேயுள்ள மண்டலமாணிக்கம் வந்து சேரும்**.**சிற்றாறுகள் கடக்கும் விபரம்**(**கரூர்**,** திருச்சி**,** புதுக்கோட்டை**,** ராமநாதபுரம்**,** சிவகங்கை**,** விருதுநகர் ஆகிய **6** லோக்சபா தொகுதிகளுக்கு உட்பட்ட**,** புங்கா ஆற்றில் ஆரம்பித்து**, 256** கி**.**மீ**.,** தொலைவில் உள்ள குண்டாறுடன் முடிகிறது**.)1.** புங்கா ஆறு **- 14.887** கி**.**மீ**.,2.** நாப்பன்னி ஆறு **- 33.850** கி**.**மீ**.,3.** அரியாறு **- 45.250** கி**.**மீ**.,4.** கோரையாறு **- 58.500** கி**.**மீ**.,5.** அக்னியாறு **- 89.970** கி**.**மீ**.,6.** கொண்டாறு **- 111.050** கி**.**மீ**.,7.** வெள்ளாறு **- 113.940** கி**.**மீ**.,8.** பாம்பனாறு **- 133.000** கி**.**மீ**.,9.** விருசுழியாறு **- 163.605** கி**.**மீ**.,10.** மணிமுத்தாறு **- 172.835** கி**.**மீ**.,11.** சருகனியாறு **- 183.155** கி**.**மீ**.,12.** உப்பாறு **- 215.325** கி**.**மீ**.,13.** வைகை ஆறு **- 222.210** கி**.**மீ**.,14.** கிருதுமால் **- 237.825** கி**.**மீ**.,15.** குண்டாறு **- 255.600** கி**.**மீ**.,**நதிகளின் குறுக்கே அமைக்கப்பட வேண்டிய பாலங்கள்தேசிய நெடுஞ்சாலைகள்**,** மாநில**,** மாவட்ட**,** கிராமச்சாலைகள்**,** ரயில்பாதைகள் மொத்தம்**:**நான்கு வழிச்சாலையில் **- 2** பாலங்கள்இரு வழிச்சாலையில் **- 13** பாலங்கள்ஒரு வழிச்சாலையில் **- 118** பாலங்கள்**.**மேலும்**, 133** சாலை வழிப்பாலங்கள்**.**ரயில் பாலங்கள் **- 9**திருச்சி **-** ஈரோடு ரயில்பாதைதிருச்சி **-** புதுக்கோட்டை ரயில்பாதைபுதுக்கோட்டை **-** காரைக்குடிசிவகங்கை **-** மானாமதுரைமானாமதுரை **-** மதுரைநேரடி மதகு துணைக்கால்வாய் மூலம் பாசன வசதி **(**எக்டேரில்**)1.** நேரடி மதகு **- 7,4572.** திருப்பூர் **- 17,8273.** நரங்கியான்பட்டி **-**

**36,9134.** பிள்ளைபட்டி **- 8,7725.** பள்ளத்தூர் **- 9,6506.** கோட்டையூர் **- 10,9507.** மானகிரி **- 6,0768.** கிழவிளஞ்சும்பட்டி **- 21,5659.** ஊத்துக்குளம் **- 18,31710.** ஓட்டக்குளம் **- 63,84711.** குவளைவேலி **- 79,60812.** இசலி **- 5,27113.** கிருஷ்ணாபுரம் **- 51,464**மொத்தம் **3** லட்சத்து **37** ஆயிரத்து **717** எக்டேர் **(8** லட்சம் ஏக்கர் பயன்பெறும்**)**

தினமணி

**திருச்சியில் 102 டிகிரி வெயில்**

தமிழகத்தில் அதிகபட்சமாக திருச்சியில் திங்கள்கிழமை 102 டிகிரி வெயில் பதிவானது.

அதேவேளையில் தமிழகம் மற்றும் புதுவையின் சில இடங்களில் செவ்வாய்க்கிழமை (ஜூலை 8) மழை பெய்யும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தமிழகத்தில் கோடை காலம் முடிந்துள்ள நிலையில், வெப்பச்சலனத்தின் காரணமாக பல இடங்களில் மழை பெய்து வருகிறது. ஆனால் சில இடங்களில் வழக்கத்துக்கு மாறாக அதிக வெயிலும் பதிவாகி வருகிறது. இந்த நிலையில், திருச்சி மற்றும் மதுரையில் 100 டிகிரிக்கு மேல் வெயில் திங்கள்கிழமை பதிவானது. திருச்சியில் 102 டிகிரி பாரன்ஹீட் வெயிலும் மதுரையில் 101 டிகிரி பாரன்ஹீட் வெயிலும் பதிவானது.

வானிலை முன்னறிவிப்பு: தமிழகம் மற்றும் புதுவையின் சில இடங்களில் செவ்வாய்க்கிழமை மழையோ அல்லது இடியுடன்

கூடிய மழையோ பெய்ய வாய்ப்புள்ளது. சென்னையைப் பொருத்தவரையில் வானம் மேகமூட்டமாக இருக்கும். மாலை அல்லது இரவில் மழை பெய்ய வாய்ப்புள்ளது.

இந்த நிலையில் திங்கள்கிழமை காலை வரையிலான நிலவரப்படி, காரைக்காலில் 90 மி.மீ. மழை பெய்துள்ளது. திருவிடைமருதூரில் 80 மி.மீ. மழையும், சிவகங்கை, ஜெயங்கொண்டத்தில் 60 மி.மீ. மழையும் பெய்துள்ளது.

மேலும் நெய்வேலி, நாகப்பட்டினம், நாமக்கல், பாபநாசம், செய்யாறு, சீர்காழி, சிதம்பரம், திருவாரூர், திண்டிவனம், கொடைக்கானல், கிருஷ்ணகிரி ஆகிய இடங்களிலும் மழை பெய்துள்ளது.

**வேளாண் விற்பனை மையத்தில் காலாவதியான உரம், மருந்து**

**காஞ்சிபுரம்;** அருகே களக்காட்டூர் வேளாண் துணை விற்பனை கிடங்கில் காலாவதியான உரம் மற்றும் மருந்து வழங்கப்படுவதாக விவசாயிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

தமிழக அரசு விவசாயத்தை சீர்படுத்தும் வகையில் பல்வேறு முயற்சிகளை செய்து வருகிறது. விவசாயிகளுக்கு எளிதில் உரம், மருந்து, விதைகள் மற்றும் வேளாண் உபகரணங்கள் எளிதில் கிடைக்கும் வகையில் வேளாண் விற்பனைக் கிடங்கு, வேளாண் துணை விற்பனைக் கிடங்கு, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்களில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது.

இது விவசாயிகளுக்கு பெரும் உதவியாக உள்ளது. மேலும் நெல் உற்பத்தியை அதிகரிக்கும் வகையில் திருந்திய நெல் சாகுபடி திட்டத்தை வேளாண்துறை அறிமுகப்படுத்தியுள்ளது.

இதன் மூலம் குறைந்த நிலத்தில் அதிக மகசூல் பெறலாம் என்று விவசாயிகளுக்கு, வேளாண்துறை அதிகாரிகள் வலியுறுத்தி வருகின்றனர்.

மேலும் திருந்திய நெல் சாகுபடித் திட்டத்தை விவசாயிகளிடம் கொண்டு சேர்க்கும் வகையில், இத்திட்டதை கையாளும் விவசாயிகளுக்கு உரம், மருந்து மற்றும் ரூ. 1,500 ஊக்கத்தொகை வழங்கப்படுகிறது.

காலாவதியான மருந்து: காஞ்சிபுரம் அருகே களக்காட்டூர் வேளாண் துணை விற்பனை கிடங்கில் திருந்திய நெல் சாகுபடி திட்ட விவசாயிகளுக்கு இலவசமாக

மருந்து, உரம் மற்றும் ரூ. 1,500-க்கான காசோலை வழங்கப்படுகிறது. ஆனால் இந்த விற்பனைக் கிடங்கில் வழங்கப்படும் மருந்துகள் காலாவதியாக உள்ளது. அதாவது விவசாயிகளுக்கு வழங்கப்படும் சூடோமோனாஸ் ஃப்ளோரசன்ஸ் என்ற பூச்சிக்கொல்லி மருந்து வகைகளை தயாரிக்கப்பட்ட மாதத்தில் இருந்து 6 மாதங்கள் பயன்படுத்தலாம். கடந்த டிசம்பர் மாதம் தயாரிக்கப்பட்ட மருந்து வகைகள் 7 மாதங்களைக் கடந்த நிலையில் ஜூலை மாதத்திலும் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

இதனால் விவசாயிகள் கடும் அதிருப்தி அடைந்துள்ளனர். இது குறித்து காவாந்தண்டலம் விவசாயி கே.பி. சிவசங்கரன் கூறியது: "எங்கள் கிராமம் விவசாயத்தை நம்பியே உள்ளது.

தமிழக அரசு அறிவித்துள்ள திருந்திய நெல் சாகுபடி முறை பயிர் செய்யும் விவசாயிகளுக்கு மருந்து, உரம், ரூ. 1,500-க்கான காசோலை வழங்க வேண்டும். நாங்கள் களக்காட்டூரில் உள்ள வேளாண் துணை விற்பனைக் கிடங்கில் சென்று வாங்கி வருகிறோம்.

ஆனால் ரூ. 1,500-க்கான காசோலையை தருவதற்கு ரூ. 200 முதல் ரூ. 600 வரை வசூலித்து விடுகின்றனர். இது குறித்து கேட்டால், "எங்களுக்கு அப்படித்தான் அரசு உத்தரவு வந்துள்ளது' என்கின்றனர். ஆனால், வசூலிக்கும் பணத்துக்கு ரசீது தருவது இல்லை.

இதற்கெல்லாம் மேலாக காலாவதியான மருந்து மற்றும் உரத்தை வழங்குகின்றனர். இது குறித்து ஆட்சியரிடம் புகார் செய்துள்ளேன்' என்றார் சிவசங்கரன். இதேநிலைதான் மாவட்டத்தில் மற்றப் பகுதிகளில் உள்ள வேளாண் விற்பனைக் கிடங்குகளிலும் நிகழ்வதாக விவசாயிகள் குற்றஞ்சாட்டினர்.

## வறட்சியால் விவசாய பணிகள் பாதிப்பு

**திருவாடானை** தாலுகாவில் கடும் வறட்சி ஏற்பட்டு விவசாயப் பணிகள் பாதிப்படைந்துள்ளன.

திருவாடானை தாலுகா முழுவதும் சுமார் 1 லட்சத்து 50ஆயிரம் ஏக்கர் நிலப் பரளவில் நெல் விவசாயம் செய்யப்பட்டு வருகிறது. தமிழகத்தின் இரண்டாவது நெற் களஞ்சியம் என அழைக்கப்படும் இப்பகுதியில் ஜூன், ஜூலை மாதங்களில் விவசாயிகள் வயல்களை நன்கு உழுது ஆகஸ்டு செப்டம்பர் மாதங்களில் நேரடி நெல் விதைப்பில் ஈடுபடுவர். ஆடிப்பட்டம் தேடி விதை என்ற பழமொழியும் உண்டு. அதற்கு ஏற்றாற் போல் ஆயத்தம் ஆவார்கள்.

கடந்த சில மாதங்களாக வழக்கத்துக்கு மாறாக கடும் வெயில் தாக்கி வருகிறது. இதனால் நிலத்தின் ஈரப்பதம் முற்றிலும் காய்ந்து தரை இறுகி உழவுப் பணி செய்ய முடியாத அளவுக்கு உள்ளது. அனல் காற்று வீசுவதால் விவசாயப் பணிகள் செய்ய முடியாமல் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். பருவ மழை துவங்க இன்னும் சில நாள்களே உள்ள நிலையில் கடும் வெயில் தாக்கி வருவது விவசாயிகளை மேலும் கவலை அடைய செய்துள்ளது.

இயற்கை வளங்களை பாதுகாக்க வலியுறுத்தி 3,500 கி.மீ. சைக்கிள் பயணம்

இயற்கை வளங்களை பாதுகாக்க வலியுறுத்தி, மேற்குத் தொடர்ச்சி மலை வழியாக 3,500 கி.மீ. தூரம் சைக்கிள் பயணத்தை ஞாயிற்றுக்கிழமை கோவையிலிருந்து பட்டதாரி இளைஞர் கலைச்செல்வன் (23) துவங்கினார்.

திருப்பத்தூரைச் சேர்ந்த இவர் பி.எஸ்.சி., விஷூவல் கம்யூனிகேஷன் பட்டம் பெற்றுள்ளார். மனித அலட்சியத்தால் இன்று உலகம் முழுவதும் சுற்றுச்சூழலுக்கு ஏற்பட்டுள்ள கேடு குறித்து இளைஞர் மற்றும் பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தவும், இயற்கை வளங்களை பாதுகாக்க வலியுறுத்தியும் அவர் சைக்கிள் பயணம் மேற்கொண்டுள்ளார். ஞாயிற்றுக்கிழமை (ஜூலை 6) காலை 7.45 மணியளவில் கோவை, ரேஸ் கோர்ஸ் பகுதியிலிருந்து துவங்கிய இந்த விழிப்புணர்வு சைக்கிள் பயணத்தை கோவை, ஆனந்தாஸ் ஹோட்டல்களின் உரிமையாளர் ரமேஷ்குமார் துவக்கிவைத்தார். கோவையிலிருந்து சைக்கிள் பயணம் மேற்கொண்ட அவர் காலை 9.45 மணியளவில் மேட்டுப்பாளையம் வந்தடைந்தார்.

மேட்டுப்பாளையத்தில் பொதுமக்கள் சார்பில் அவருக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது. தனது சைக்கிள் பயணம் குறித்து கலைச்செல்வன் செய்தியாளர்களிடம் கூறியது:

தற்போது உலகம் முழுவதும் ஏற்பட்டு வரும் பருவநிலை மாற்றத்தால் இந்தியா உள்பட பெரும்பாலான நாடுகள் பெரும் நெருக்கடிகளை சந்தித்து வருகின்றன.

இதற்கு முக்கியக் காரணம், இயற்கை செல்வங்களான வனம், நிலம், காற்று ஆகியவை மாசுபடுவதுதான் என்று கண்டறியப்பட்டுள்ளது. இதன் காரணமாகவே பருவமழை பொய்த்து, கடும் வறட்சி ஏற்படுவதுடன், கால நிலைகளிலும் மாற்றங்கள் உருவாகின்றன. இதை எதிர்கொள்ள உலக நாடுகள் அனைத்தும் ஒருங்கிணைந்து பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றன. அதனடிப்படையில் இந்தியாவிலும் இயற்கை வளங்களைப் பாதுகாக்க வலியுறுத்தி அரசுடன் இணைந்து தனியார் மற்றும் பொதுநல அமைப்பினரும், இயற்கை ஆர்வலர்களும் பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

அதன் ஒரு பகுதியாகவே, இயற்கை வளங்களின் முக்கியத்துவம் குறித்தும், அதைப் பாதுகாப்பதின் அவசியம் குறித்தும் பொதுமக்கள் மற்றும் இளைஞர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதி மற்றும் மேற்கு கடற்கரை வழியாக 3,500 கி.மீ. தூரத்திற்கு இந்த சைக்கிள் பயணத்தை மேற்கொண்டு ள்ளேன். கோவையில் தொடங்கிய இப்பயணம் மேட்டுப்பாளையம், உதகை, மங்களூர், கோவா, மும்பை வழியாக மேற்கு கடற்கரைப் பகுதிகளை கடந்து கேரளம் வழியாக 100 நாள்களில் மீண்டும் கோவையில் முடிவடைய உள்ளது என்றார்.

**பவானிசாகர் நீர்மட்டம் 46.40 அடி**

**பவானிசாகர்;** அணை நீர்மட்டம் திங்கள்கிழமை நிலவரப்படி 46.40 அடியாக இருந்தது.

அணைக்கு விநாடிக்கு 180 கன அடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 950 கன அடி நீர் திறந்துவிடப்பட்டது. வாய்க்காலில் பாசனத்துக்காக தண்ணீர் திறக்கப்படவில்லை. அணையில் நீர் இருப்பு 3.6 டி.எம்.சி.

மேல்செங்கம் கிராமத்தில் விதைப் பண்ணை

திருவண்ணாமலை மாவட்டத்தில் கடந்த 2002-ஆம் ஆண்டில் மூடப்பட்ட விதைப் பண்ணையை விவசாயிகளின் நலன் கருதி மீண்டும் செயல்பாட்டுக்குக் கொண்டு வர வேண்டும் என்று திருவண்ணாமலை மக்களவைத் தொகுதி அதிமுக உறுப்பினர் ஆர். வனரோஜா வலியுறுத்திள்ளார்.

இது தொடர்பாக மக்களவையில் திங்கள்கிழமை விதி எண்: 377-இன் கீழ் அவர் தாக்கல் செய்த அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது: திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் அருகே மேல்செங்கம் கிராமத்தில் வனத் துறைக்குச் சொந்தமான 11,500 ஏக்கர் நிலத்தில் 1972-இல் மத்திய, மாநில விதைப் பண்ணை ஆரம்பிக்கப்பட்டு, தினக்கூலி அடிப்படையில் 10 ஆயிரம் தொழிலாளர்கள் வேலை செய்து வந்தனர். இந் நிலையில், நஷ்டம் காரணமாக 2002-ஆம் ஆண்டில் இப் பண்ணை மூடப்பட்டது. இதனால், தற்போது 10 ஆயிரம் தொழிலாளர்கள் வேலையின்றி உள்ளனர்.

ஆகவே, விவசாயிகளுக்கு தரமான விதைகளை வழங்கும் வகையில் விதைப் பண்ணையை ஆரம்பிக்க 11,500 ஏக்கர் நிலத்தை மத்திய அரசு முழுவதுமாக எடுத்துக் கொள்ள வேண்டும். இது, 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பை அளிக்கும் பண்ணையாக உருவாகும்.

மேலும், திருவண்ணாமலை மாவட்டம் வேளாண்மை நடவடிக்கைகளுக்கான பகுதியாக அறியப்படுவதால் மத்திய அரசு இப் பகுதி மக்களின் நலன் கருதி தனது கட்டுப்பாட்டில் வேளாண் கல்லூரி அமைக்க ஓர் இடத்தை மானியமாக அளிக்க முன்வர வேண்டும் என்று வனரோஜா எம்.பி. கேட்டுக் கொண்டுள்ளார்.

## நாமக்கல்லில் பலத்த மழையால் சாலைகளில் வெள்ளம்

**நாமக்கலில்**; திங்கள்கிழமை மாலை பெய்த பலத்த மழையால் சாலைகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. தாழ்வானப் பகுதிகளை வெள்ளம் சூழ்ந்ததால், பல இடங்களில் வாகனப் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

தமிழகத்தில் தென்மேற்கு பருவ மழையின் தாக்கம் தீவிரமடைந்து வருவதை அடுத்து, மாநிலம் முழுவதும் பரவலாக மழை பெய்து வருகிறது. நாமக்கல் மாவட்டத்திலும் கடந்த மூன்று நாள்களாக மாலையில் பலத்த மழை பெய்து வருகிறது. தொடர்ந்து, திங்கள்கிழமை மாலையும் சுமார் 4 மணியளவில் தொடங்கிய மழை 6 மணி வரை தொடர்ந்து 2 மணி நேரம் பலத்த மழை பெய்தது. இதனால், சாலைகளில் ஆங்காங்கே வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது.

சேலம் சாலை, பிரதானச் சாலை, சேந்தமங்கலம் சாலை, கடை வீதி ஆகிய இடங்களில் சாக்கடைகள் நிறைந்து சாலையில் ஓடிய வெள்ளதுடன் கலந்ததால் பாதசாரிகள், இரு சக்கர, நான்கு சக்கர வாகனங்கள் தொடர்ந்து செல்ல முடியாத நிலை ஏற்பட்டது.

பள்ளி முடிந்த நேரம் என்பதால், மழையால், மாணவர்கள், ஆசிரியர்கள், பணியாளர்கள் என அனைத்துத் தரப்பினரும் வீட்டுக்குச் செல்ல முடியாமல் பாதிக்கப்பட்டனர்.

இந்த நிலையில், பலத்த மழையால் ஏற்பட்ட வெள்ளம், குட்டைத் தெரு உள்ளிட்ட நகரின் தாழ்வானப் பகுதிகளில் உள்ள குடியிருப்புகளை சூழ்ந்தது. மழை நின்றதும், குடியிருப்புகளை சூழ்ந்த தண்ணீரை அப்புறப்படுத்தும் பணியில் அந்தப் பகுதி மக்கள் ஈடுபட்டனர்.

மூன்று நாள்களாக தொடர்ந்து பெய்து வரும் மழையால், நாமக்கல் மாவட்டத்தில் வெயிலின் தாக்கம் குறைந்து, குளிர்ந்த நிலை நிலவுகிறது.

மேலும், மூன்றில் 2 பங்கு மானாவாரி நிலங்களைக் கொண்டுள்ள இந்த மாவட்டத்தில் உள்ள விவசாயிகள், தொடர் மழையால் பெரும்

மகிழ்ச்சியடைந்துள்ளனர். அவர்கள் இந்தப் பருவத்துக்கு ஏற்ற பயிர்களை விதைக்கும் பணியைத் தீவிரப்படுத்தியுள்ளனர்.

**உயிர் உரங்கள்உற்பத்தி பற்றி மாணவிகளுக்கு பயிற்சி**

**திருவாரூர்**; மாவட்டத்தில் உள்ள உயிர் உரங்கள் உற்பத்தி மையத்தில் திருச்சி அன்பில் தர்மலிங்கம் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் நான்காம் ஆண்டு மாணவிகளுக்கு பயிற்சியளிக்கப்பட்டது.

உயிர் உரத்துக்கான மூலக்கூறுகள் எங்கிருந்து வரவழைக்கப்படுகின்றன, உயிர் உரங்கள் எவ்வாறு தயார் செய்யப்படுகின்றன, என்னென்ன பயிருக்கு என்னென்ன உயிர் உரங்கள் உபயோகப்படுத்த வேண்டும், விதை நேர்த்தியை உயிர் உரங்கள் கொண்டு எவ்வாறு மேற்கொள்வது என்பன போன்ற அனைத்து தகவல்களையும் வேளாண்மை அலுவலர் தங்கபாண்டியன் விளக்கி கூறினார்.

உயிர் உரங்களை பயன்படுத்துவதால் விளையும் நன்மைகள், உயிர் உரங்களுக்கு எவ்வாறு தரச் சான்று அளிக்கப்படுகிறது, போன்ற அனைத்து தகவல்களும் மாணவிகளுக்கு விளக்கப்பட்டது. இந்த தகவலை நீடாமஙக்லம் வேளாண்மை அறிவியல் நிலைய பேராசிரியர் மற்றும் தலைவர் க. சோழன் திங்கள்கிழமை தெரிவித்தார்.

**நீடாமங்கலத்திலிருந்து 1,200 டன் அரிசி கன்னியாகுமரிக்கு ரயிலில் அனுப்பிவைப்பு**

பொது விநியோகத் திட்டத்துக்காக நீடாமங்கலத்திலிருந்து 1200 டன் அரிசி கன்னியாகுமரிக்கு திங்கள்கிழமை சரக்கு ரயில் மூலம் அனுப்பி வைக்கப்பட்டது.

திருவாரூர் மாவட்டம், ஆலங்குடி, மன்னார்குடி, திருத்துறைப்பூண்டி, சுந்தரக்கோட்டை நவீன அரிசி ஆலை, பாமணி மத்திய சேமிப்பு கிடங்கு ஆகியவற்றிலிருந்து 120 லாரிகளில் பொது ரக அரிசி (சி.ஆர். 1009) மூட்டைகள் ஏற்றப்பட்டு, நீடாமங்கலம் ரயில் நிலையத்துக்கு திங்கள்கிழமை கொண்டு வரப்பட்டது. இதன் மொத்த எடை 1,200 டன் ஆகும்.

ரயில் நிலையத்தில் சரக்கு ரயிலின் 21 பெட்டிகளில் அந்த மூட்டைகள் ஏற்றப்பட்டு, கன்னியாகுமரிக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

**வலங்கைமானில் வேளாண் இடுபொருள்கள் அளிப்பு**

**வலங்கைமானில்** தமிழக முதல்வரின் குறுவை சாகுபடி சிறப்பு தொகுப்பு திட்டத்தின் கீழ், விவசாயிகளுக்கு வேளாண் இடுபொருட்கள் ஞாயிற்றுக்கிழமை வழங்கப்பட்டன.

இதற்கான விழாவுக்கு ஆட்சியர் எம். மதிவாணன் தலைமை வகித்தார். வேளாண் கூடுதல் இயக்குநர் ராஜேந்திரன், மாவட்ட வருவாய் அலுவலர் பு. மணிமாறன், கூட்டுறவு சங்க இணைப் பதிவாளர் ரவிச்சந்திரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

விழாவில் கலந்து கொண்டு விவசாயிகளுக்கு வேளாண் இடுபொருள்களை வழங்கி மாநில உணவுத் துறை அமைச்சர் ஆர். காமராஜ் பேசியது:

நிகழாண்டில், 100 சத மானியத்தில் 50 விவசாயிகள் குழுவுக்கு ரூ. 1 கோடி நிதி ஒதுக்கீட்டில் நெல் நடவு இயந்திரங்களும், ரூ. 15 லட்சம் ஒதுக்கீட்டில் 50 இயந்திர களையெடுக்கும் கருவிகளும், ரூ. 4.20 லட்சத்தில் 600 அடி நீளமுள்ள 2 ஆயிரத்து 100 அலகு பிவிசி குழாய்களும், 170 ஹெக்டேர் பரப்பில் முன்கூட்டியே சமுதாய நாற்றாங்கால் அமைத்து 100 சத மானியத்தில் நாற்றாங்கால் வழங்கிட 106.25 லட்ச ரூபாய் ஒதுக்கீடு 14 ஆயிரம் ஹெக்டேர் பரப்பிற்கு ரூ. 122.5 லட்சம் ஒதுக்கீடு, நுண்சத்துக்காக ரூ. 50.75 லட்சமும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், 6 ஆயிரத்து 800 ஹெக்டேர் பரப்பிற்கு 119 லட்சம் ரூபாய் ஒதுக்கீட்டில் ஜிப்சம், 4 ஆயிரத்து 800 ஹெக்டேர் பரப்பிற்கு உயிர் உரங்களுக்கு ரூ. 28.8 லட்சம் ஒதுக்கீடு என மொத்தம் ரூ. 968.3 லட்சம் நிதி திருவாரூர் மாவட்டத்துக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றார்.

விழாவில் வேளாண் இணை இயக்குநர் தேவேந்திரன், திருவாரூர் ஆர்.டி.ஓ. பரமசிவம்,வேளாண் அலுவலர் பிரபு, ஒன்றியக் குழுத் தலைவர் பரமேஸ்வரி, துணைத் தலைவர் அ. குருமூர்த்தி, உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

முன்னதாக, வேளாண் இணை இயக்குநர் மயில்வாகனன் வரவேற்றார். நிறைவில் பேரூராட்சி தலைவர் எஸ். ஜெயபால் நன்றி கூறினார்.

**<u>தீவன மேம்பாட்டுத் திட்டம்:விவசாயிகள் விண்ணப்பிக்கலாம்</u>**

கால்நடை பராமரிப்புத் துறை மூலம் செயல்படுத்தப்படும் தீவன அபிவிருத்தித் திட்டத்தில் சேர்ந்து பயன் பெற விவசாயிகள் விண்ணப்பிக்கலாம் என ஆட்சியர் து. முனுசாமி தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு :

விலையில்லா கறவைப் பசுக்களுக்கு பசுந்தீவனம் வழங்கும் வகையில், மாநில தீவன அபிவிருத்தித் திட்டத்தை அரசு செயல்படுத்தி வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் 2014-15-ம் ஆண்டில் நாகை மாவட்டத்தில் 50 ஏக்கரில் பசுந்தீவனம் உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டு ரூ. 11.9 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டம் மூலம், அதிக மகசூல் தரக்கூடிய புல் வகையைச் சேர்ந்த கம்பு நேப்பியர், ஒட்டுப்புல் ரகங்கள் கோ-3 அல்லது கோ-4 சாகுபடி செய்ய 0.25 ஏக்கருக்கு ரூ. 2 ஆயிரம் வீதம் 100 சதவீதம் மானியம் வழங்கப்படவுள்ளது.

இத்திட்டத்தில், நீர் சேமிப்பு உபகரணங்களாகிய மழைத் தூவான்கள் 75 சதவீத மானியத்துடன் 10 பயனாளிகளுக்கு வழங்கப்படும். தீவன உற்பத்திக்காக அசோலா எனும் பசும் பாசி வகை 100 சதவீத மானியத்துடன் 350 பயனாளிகளுக்கு வழங்கப்படும். ஒரு ஏக்கருக்கு 4 கிலோ வீதம் 20 ஏக்கர் நிலத்தில் அகத்தி உற்பத்தி செய்ய 100 சதவீத மானியத்தில் அகத்தி விதைகள் வழங்கப்படும். கால்நடைகளுக்குத் தேவையான தீவனப் பயிர் சாகுபடி செய்ய விரும்பும் விவசாயிகள் தங்கள் அருகிலுள்ள கால்நடை நிலையங்களில் கால்நடை உதவி மருத்துவரிடம் எழுத்து மூலம் விண்ணப்பிக்கலாம்.

**<u>திருவிடைமருதூரில் 83 மி.மீ., மழை</u>**

**தஞ்சாவூர்;** மாவட்டத்தில் அதிகபட்சமாக திருவிடைமருதூரில் 83 மி.மீ., மழை பெய்தது.

மாவட்டத்தில் ஞாயிற்றுக்கிழமை மாலை பரவலாக மழை பெய்தது. மாவட்டத்தில் திங்கள்கிழமை காலை 8.30 மணியுடன் முடிவடைந்த 24 மணிநேரத்தில் பெய்த மழையளவு (மில்லிமீட்டரில்):

திருவிடைமருதூர் 83, கும்பகோணம் 54, மஞ்சலாறு 45.2, பாபநாசம் 22, அணைக்கரை 21.8, அய்யம்பேட்டை 18, திருவையாறு 5, மதுக்கூர் 4.8, தஞ்சாவூர் 2.6, பூதலூர் 2.2, நெய்வாசல் தென்பாதி 1.4.

**விவசாயிகளுக்கு தேனீ வளர்ப்பு பயிற்சி**

**பெரம்பலூர்**, மாவட்டம், வாலிகண்டபுரத்தில் உள்ள ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மையத்தில் ஜூலை 16-ல் விவசாயிகளுக்கு தேனீ வளர்ப்பு பயிற்சி அளிக்கப்பட உள்ளது என்றார் மைய திட்ட ஒருங்கிணைப்பாளர் (பொ) ப. விஜயலட்சுமி.

இதுகுறித்து அவர் திங்கள்கிழமை வெளியிட்ட செய்திக்குறிப்பு:

காலை 10 மணி முதல் மாலை 3 மணி வரை நடைபெறும் பயிற்சியில், ஆர்வமுள்ள விவசாயிகள் பங்கேற்றுப் பயன் பெறலாம்.

பயிற்சியில் பங்கேற்க ஆர்வமுள்ள விவசாயிகள் மையத்தை (04328- 293592), அல்லது பயிர் பாதுகாப்பு தொழில் நுட்ப வல்லுநரை (9787620754) காலை 9.30 மணி முதல் மாலை 5 மணி வரை தொடர்பு கொண்டு முன்பதிவு செய்துகொள்ளலாம்.

**கரும்பு விவசாயிகள் சங்க நிர்வாகக் குழுக் கூட்டம்**

செங்கல்வராயன் கூட்டுறவு சர்க்கரை ஆலை தமிழ்நாடு கரும்பு விவசாயிகள் சங்க நிர்வாகக் குழுக் கூட்டம் களமருதூரில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

கூட்டத்துக்கு மாநிலச் செயலாளர் ஆர்.சீனுவாசன் தலைமை வகித்தார். ஆலை பொருளாளர் ஜோதிராமன், ஆலை சங்க நிர்வாகிகள் ஏழுமலை, ஸ்ரீதர், சாரங்கபாணி, ஜோதிலிங்கம், அப்துல் அஜித், குணசேகர், சக்திவேல் உள்பட பலர் கலந்துகொண்டனர்.

15.03.2014ஆம் தேதி வரை பெரியசெவலை செங்கல்வராயன் கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு வெட்டி அனுப்பிய கரும்புக்கு உடனடியாக பணம் பட்டுவாடா செய்ய வலியுறுத்தி புதன்கிழமை சர்க்கரை ஆலை முன்பு போராட்டம் நடத்துதல், 1966ஆம் ஆண்டு கரும்பு கட்டுப்பாடு சட்டத்தின்படி வெட்டி அனுப்பிய கரும்புக்கு 15 நாள்களுக்குள் கிரையத் தொகையை பட்டுவாடா செய்யக் கோருதல், அக்டோபர் முதல் வாரத்திலேயே கூட்டு மின் திட்டத்தின்படி அரவையை தொடங்க வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன.

**<u>திண்டிவனம் எண்ணெய் வித்துக்கள் ஆராய்ச்சி நிலையத்துக்கு விருது</u>**

**திண்டிவனம்**, எண்ணெய் வித்துக்கள் ஆராய்ச்சி நிலையத்துக்கு 2013ஆம் ஆண்டுக்கான சிறந்து விருது அண்மையில் வழங்கப்பட்டது.

கோவை தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற 44ஆவது நிறுவன நாள் விழாவில் 2013ஆம் ஆண்டிற்கான சிறந்த வேளாண் ஆராய்ச்சி நிறுவனத்திற்கான விருது திண்டிவனம் எண்ணெய் வித்துக்கள் ஆராய்ச்சி நிலையத்துக்கு வழங்கப்பட்டது. விருதை தமிழக வேளாண் அமைச்சர் அக்ரி எஸ்.எஸ்.கிருஷ்ணமூர்த்தி வழங்கிட, நிலையத்தின் தலைவர் முனைவர் ர.வைத்தியநாதன் பெற்றுக்கொண்டார்.

1935ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட இந்நிலையம் தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தின் கீழ் எண்ணெய் வித்துக்கள் ஆராய்ச்சி நிலையமாக 1982-ல் இருந்து செயல்பட்டு வருகிறது.

இங்கிருந்து 13 ரகங்களில் மணிலாவும், 7 ரகங்களில் எள்ளும், 6 ரகங்களில் ஆமணக்கும், உளுந்தில் ஒரு ரகமும், பணப் பயிரில் ஒரு ரகமும் வெளியிடப்பட்டுள்ளன.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் முதல் பட்டயப் படிப்பு நிலையமான சி.சுப்பிரமணியம் வேளாண் பட்டயப் படிப்பு நிலையம்

திண்டிவனத்தில் கடந்த 2004ஆம் ஆண்டு முதல் இவ்வாராய்ச்சி வளாகத்தினுள் செயல்பட்டு வருகிறது.

இந்நிலையத்தில் இதுவரை 318 மாணவ, மாணவிகள் பட்டயப் படிப்பு முடித்து அரசு மற்றும் தனியார் நிறுவனங்களில் பணியாற்றி வருகின்றனர்.

சிறந்த விருது பெற்ற பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் ர.வைத்தியநாதனுக்கு நிலையத்தில் பணியாற்றும் விஞ்ஞானிகள், பேராசிரியர்கள் உள்ளிட்டோர் வாழ்த்து தெரிவித்தனர்.

**அரசின் மானிய விலை திட்டத்தின் கீழ், மானிய விலையில் 1,300 டன் வைக்கோல் விற்பனை நடந்துள்ளது.**

வைக்கோல் விற்பனை

தமிழகத்தில் கடந்த 2 ஆண்டுகளில் பருவமழை குறைவாகவே பெய்தது. இதனால் நீர்நிலைகள் வறண்டு விவசாயம் பெரிதும் பாதிக்கப்பட்டது. இதனால் கால்நடை வளர்ப்போர் தீவன தட்டுப்பாடு ஏற்பட்டதால் விவசாயம் மட்டுமின்றி கால்நடை தீவனங்களுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டது. இதனை தொடர்ந்து வறட்சி பாதித்த மாவட்டங்களில் மானிய விலையில் வைக்கோல் விற்பனை செய்யும் திட்டம் செயல்படுத்தப்பட்டது. இதற்காக ரூ. 1 கோடி நிதி ஒதுக்கப்பட்டது. அதன்படி திண்டுக்கல் மாவட்டத்தில் முதல்கட்டமாக வத்தலக்குண்டு, கோபால்பட்டி, வேடசந்தூர், குஜிலியம்பாறை, தேவத்தூர் ஆகிய 5 இடங்களில் மானிய விலை வைக்கோல் விற்பனை மையங்கள் தொடங்கப்பட்டன. இங்கு ஒரு கிலோ வைக்கோல் ரூ.2-க்கு விற்பனை செய்யப்படுகிறது.

10 மையங்கள்

இதனை தொடர்ந்து 2-வது கட்டமாக தாடிக்கொம்பு, ஒட்டன்சத்திரம், நெய்க்காரப்பட்டி, ஆத்தூர், நிலக்கோட்டை ஆகிய இடங்களில் மானிய விலை வைக்கோல் விற்பனை மையங்கள் தொடங்கப்பட்டன. இதன்மூலம் மாவட்டம் முழுவதும் மொத்தம் 10 இடங்களில் வைக்கோல் விற்பனை மையங்கள் இயங்கி வருகின்றன.

இந்த மையங்களில் 800-க்கும் மேற்பட்ட விவசாயிகள் தங்களை பதிவு செய்துள்ளனர். இவர்களுக்கு கால்நடை பராமரிப்பு துறை சார்பில் அடையாள அட்டைகள் வழங்கப்பட்டு, வைக்கோல் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

1,300 டன் விற்பனை

இந்த மானிய வைக்கோல் விற்பனை மையங்கள் தொடங்கி 3 மாதகாலமாக செயல்பட்டு வருகின்றன. மேலும், மாவட்டத்தின் பல இடங்களில் வறட்சி தலைவிரித்து ஆடுவதால், மானிய வைக்கோல் விற்பனை அதிகரித்து உள்ளன. அதன்படி இதுவரை மாவட்டத்தில் உள்ள 10 மையங்களிலும், மொத்தம் 1,300 டன் வைக்கோல் விற்பனை செய்யப்பட்டு இருக்கின்றன. வைக்கோல் விற்பனை விறு, விறுப்பாக நடப்பதால் தடையில்லா கொள்முதல் நடவடிக்கையில் கால்நடை பராமரிப்பு துறையினர் ஈடுபட்டுள்ளனர்.

கால நீட்டிப்பு

ஆனால், இந்த மானிய வைக்கோல் விற்பனை 3 மாத கால திட்டமாக தொடங்கப்பட்டது ஆகும். அதன்படி இந்த மாதத்துடன் (ஜூலை) மானிய விலையில் வைக்கோல் வழங்கும் திட்டம் முடிகிறது. இதற்கு அரசு ஒதுக்கிய நிதியில் 90 சதவீதம் செலவு செய்யப்பட்டு உள்ளது.

ஆனால், வறட்சியின் காரணமாக தீவன உற்பத்தி குறைவாகவே உள்ளது. மானிய விலையில் வைக்கோல் விற்பனையும் அதிக வரவேற்பும் பெற்றுள்ளது. எனவே, மானிய விலை வைக்கோல் விற்பனையை கால நீட்டிப்பு செய்ய வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மல்லிகை பூ செடிகளை தாக்கும் வெள்ளை பூச்சிகளை அழிப்பது எப்படி விவசாயிகளுக்கு வேளாண் பல்கலைக்கழக மாணவிகள் விளக்கம்

**<u>மல்லிகை பூ செடிகளை தாக்கும் வெள்ளை பூச்சிகளை அழிப்பது எப்படி என்று விவசாயிகளுக்கு வேளாண் பல்கலைக்கழக மாணவிகள் விளக்கம் அளித்தனர்.</u>**

வேளாண் மாணவிகள்

கோவை வேளாண்மை பல்கலைக்கழக கிராமபுற தங்கள் திட்டத்தின் கீழ் சத்தியமங்கலம் அருகே உள்ள அரியப்பம்பாளையத்தில் மாணவிகள் தங்கி இப்பகுதியை சுற்றியுள்ள விவசாயிகளுக்கு பயிற்சி அளித்து வருகின்றனர். பவானிசாகர் மற்றும் சத்தியமங்கலம் பகுதியில் முக்கிய பயிராக திகழும் மல்லிகை பூச்செடியை தாக்கும் வெள்ளை பூச்சிகளை எப்படி மஞ்சள் ஒட்டுண்ணிகளை வைத்து அழிப்பது என்பது குறித்து தாண்டாம்பாளையத்தில் சிவா என்ற விவசாயி தோட்டத்தில் விளக்கம் அளித்தனர்.

வெள்ளை பூச்சிகள் மல்லிகை பூச்செடியை அதிகம் தாக்குகிறது. இதனால் 10 சதவீதம் வரை மகசூல் பாதித்து மாதம் ரூ.3 ஆயிரம் வரை விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்பட்டு வருகிறது. ஆகவே மல்லிகை பூ செடியை தாக்கும் வெள்ளை பூச்சிகளை கட்டுப்படுத்தும் மஞ்சள் நிற ஒட்டுண்ணிகளை பயன்படுத்தும் விதத்தை பல்கலைக்கழக மாணவிகள் செயல்முறை விளக்கம் அளித்தனர்.

<u>வெள்ளை பூச்சி</u>

வெள்ளை பூச்சிகள் மஞ்சள் நிறத்தாள் ஈர்க்கப்படுகிறது. இந்த மஞ்சள் பொறியில் பசை தடவியுள்ளதால் வெள்ளை பூச்சி இந்த பொறியில் சிக்கி மீண்டும் பறக்க முடியாமல் இறந்து விடுகின்றன. இதன் மூலம் வெள்ளைப்பூச்சி கட்டுப்படுத்தி அழிக்கப்படுகிறது. ஏக்கர் ஒன்றுக்கு 5 முதல் 6 பொறிகளை போதிய இடைவெளி விட்டு செடியின் உயரத்திற்கு தகுந்தாற்போல் வைத்தால் வெள்ளை பூச்சிகளை

எளிதில் அழித்துவிடலாம் என இந்த மாணவிகள் விவசாயிகளிடம் எடுத்து கூறினர்.

இந்த விளக்க பயிற்சியில் கோவை வேளாண்மை பல்கலைக்கழக அதிகாரிகள் மற்றும் சத்தியமங்கலம் வட்டார தோட்டக்கலை உதவி இயக்குனர் பழனிச்சாமி, உதவி அதிகாரி வேலுச்சாமி உட்பட பலர் கலந்துகொண்டனர்.

**நாகை மாவட்ட விவசாயிகள் நாட்டுக்கோழிப்பண்ணை அமைக்க விண்ணப்பிக்கலாம் கலெக்டர் முனுசாமி தகவல்**



**நாகை** மாவட்டத்தில் நாட்டுக் கோழிப்பண்ணை அமைக்க ஆர்வமுள்ள விவசாயிகள் விண்ணப்பிக்கலாம் என்று கலெக்டர் முனுசாமி கூறியுள்ளார்.

நாகை மாவட்ட கலெக்டர் முனுசாமி ஒரு அறிக்கை வெளியிட்டுள்ளார். அந்த அறிக்கையில் அவர் கூறியிருப்பதாவது:–

நாட்டுக்கோழி வளர்ப்பு

தமிழக முதல்–அமைச்சரால் கடந்த 2012–2013–ம் ஆண்டு கோழியின மேம்பாட்டு திட்டம் அறிவிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. அந்த ஆண்டில் நாகை மாவட்டத்தில் 35 பயனாளிகளுக்கு நாட்டு கோழிக்குஞ்சுகள் வழங்கப்பட்டது. 2013–14–ம் ஆண்டில் 240 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. அதேபோல் 2014–15–ம் நிதியாண்டில் நாட்டுக்கோழி வளர்ப்பினை மேம்படுத்தும் வகையில்

ஒரு பயனாளிக்கு 1 லட்சத்து 17 ஆயிரம் திட்ட மதிப்பீட்டில் மொத்தம் 160 பயனாளிகளுக்கு வழங்கப்பட உள்ளது. இதில் 50 சதவீதம் மானியம் வழங்கப்படும். இத்திட்டத்தின் கீழ் கோழி கொட்டகை அமைத்திட, குஞ்சு மற்றும் தீவனம், உபகரணங்கள் வாங்கிய முதல் தவணையாக 25 சதவீத மானியத்தொகை ரூ.29 ஆயிரத்து 250 மாநில அரசாலும், இறுதியில் 25 சதவீதம் மானியத் தொகை (ஆதிதிராவிடர்களுக்கு 33 சதவீதம்) நபார்டு வங்கி மூலமாகவும் வழங்கப்படும். முதல் தவணை கோழிக்குஞ்சுகள் 100 சதவீதம் மானியத்திலும், 2–வது தவணை கோழிக்குஞ்சுகள் 50 சதவீதம் மானியம் ரூ.3 ஆயிரத்து 125–க்கும், 3–வது தவணை கோழிக்குஞ்சுகள் 30 சதவீதம் மானியம் ரூ.ஆயிரத்து 875–க்கும் தமிழக அரசு, கால்நடை பராமரிப்பு துறை மூலம் வழங்கப்படும்.

<u>19–ந் தேதிக்குள்...</u>

இத்திட்டத்தில் தேர்ந்தெடுக்கப்படும் பயனாளிகளுக்கு தமிழ்நாடு கால்நடை அறிவியல் பல்கலைக்கழகம் மூலம் 5 நாட்கள் சிறப்பு பயிற்சி அளிக்கப்பட்டு சான்றிதழ் வழங்கப்படும். மருத்துவம் மற்றும் தடுப்பூசிகள் கால்நடை பராமரிப்பு துறை மூலம் வழங்கப்படும். இத்திட்டத்தின்கீழ் ஒரு பயனாளிக்கு ஒரு முறை மட்டுமே மானியம் வழங்கப்டும். இந்த திட்டம் கிராமப்புற பகுதியில் மட்டுமே செயல்படுத்தப்பட உள்ளது. 12 முதல் 14 வார காலத்திற்குள் நாட்டு கோழிகள் விற்பனை செய்யும் அளவிற்கு வளர்ந்துவிடும் என்பதால் ஒரு ஆண்டில் 14 வார சுழற்சியில் 3 தவணையில் 250 கோழிகள் வளர்க்க ஏதுவாக இத்திட்டம் அமைந்துள்ளது. எனவே நாகை மாவட்டத்தில் நாட்டுக்கோழி பண்ணை அமைக்க ஆர்வமுள்ள விவசாயிகள் அதற்கான விண்ணப்பங்களை வருகிற 19–ந் தேதிக்குள் சம்பந்தப்பட்ட தேசியமயமாக்கப்பட்ட வங்கி அல்லது கூட்டுறவு வங்கி மூலமாகவோ அல்லது நாகை கால்நடை பராமரிப்புத்துறை, மண்டல இணை இயக்குனர் அலுவலகத்திலோ சமர்ப்பிக்கலாம். இவ்வாறு அதில் அவர் கூறியுள்ளார்.

## சுல்தான்பேட்டை பகுதியில் கொத்தமல்லி விலை அதிகரிப்பு



**சுல்தான்பேட்டை**, ஒன்றியத்தில் செஞ்சேரி மலை, ஜல்லிபட்டி, கம்மாளப்பட்டி, வதம்பச்சேரி, ஓடக்கல்பாளையம் உள்பட பல்வேறு இடங்களில் 100 ஏக்கர் பரப்பளவில் கொத்தமல்லி சாகுபடி செய்யப் பட்டுள்ளது. அறுவடைக்கு பின்னர் அவைகள் கோவை, திருப்பூர், பல்லடம் மற்றும் கேரள மாநிலத்துக்கு விற்பனைக்கு அனுப்பி வைக் கப்படுகிறது. கடந்த மாதம் சுல்தான்பேட்டை பகுதி யில் 200 கிராம் கொண்ட ஒரு கட்டு கொத்தமல்லியை வியாபாரிகள் ரூ.3 முதல் ரூ.4 வரை கொடுத்து, விவசாயிகளிடம் இருந்து வாங்கி சென்றனர். இதனை மார்க்கெட்டில் ரூ.5–க்கு விற்பனை செய்தனர்.

இந்த நிலையில் கொத்தமல்லி தேவை அதிகரிப்பு, விளைச்சல் குறைவு காரணமாக அதன் விலை உயர்ந்துள்ளது. தற்போது 200 கிராம் எடை கொண்ட ஒரு கட்டு விவசாயிகளிடம் இருந்து ரூ.10–க்கு கொள்முதல் செய்யப்படுகிறது. மார்க்கெட் மற்றும் சில் லறை கடைகளில் ஒரு கட்டு ரூ.15–க்கு விற்பனை செய்யப்படுகிறது. கொத்தமல்லி விலை உயர்ந்துள்ளதால் சுல்தான்பேட்டை ஒன்றிய விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## குறுவை சாகுபடி திட்டத்தில் விவசாயிகளுக்கு வேளாண்மை இடுபொருட்கள் அமைச்சர் காமராஜ் வழங்கினார்



வலங்கைமான்,

குறுவை சாகுபடி திட்டத் தில் விவசாயிகளுக்கு வேளாண்மை இடு பொருட்களை அமைச்சர் காமராஜ் வழங்கினார்.

### மானியம் வழங்கும் நிகழ்ச்சி

தமிழக அரசு குறுவை சாகுபடி பருவத்தை முன்னிட்டு சிறப்பு தொகுப்பு திட்டத்தை அறிவித்துள்ளது. இதன்படி விவசாயி களுக்கு வேளாண்மை எந்தி ரங்கள், இடுபொருட்கள் மானியங்களாக வழங்கப்படு கின்றன.

திருவாரூர் மாவட்டத்தில் குறுவை சாகுபடி சிறப்பு தொகுப்பு திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு மானியங்கள் வழங்குவதற்கான தொடக்க நிகழ்ச்சி வலங்கைமானில் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு திருவாரூர் கலெக்டர் மதிவாணன் தலைமை தாங்கினார். வேளாண்மை துறை கூடுதல் இயக்குனர் ராஜேந்திரன், மாவட்ட வருவாய் அதிகாரி மணிமாறன், வலங்கைமான் ஒன்றியக்குழு தலைவர் பரமேஸ்வரி ராஜமாணிக்கம், ஒன் றியக்குழு துணை தலைவர் குருமூர்த்தி, கூட்டுறவு இணைப்பதிவாளர் ரவிச்சந்திரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

### ரூ.10 கோடி மதிப்பில்...

நிகழ்ச்சியில் ரூ.10 கோடி மதிப்பிலான வேளாண்மை இடுபொருட்கள், எந்திரங்கள் விவசாயிகளுக்கு மானியமாக வழங்கப்பட்டன. அமைச்சர் ஆர்.காமராஜ், விவசாயி

களுக்கு மானியங்களை வழங்கி சிறப்பு தொகுப்பு திட்டத்தை தொடங்கி வைத்து பேசினார். அப்போது அவர் கூறியதாவது:-

குறுவை சாகுபடி திட்டம்

2012-2013-ம் ஆண்டில் வறட்சி நிலவியதால் முதல்-அமைச்சர் ஜெயலலிதா, திரு வாரூர் மாவட்டத்துக்கு ரூ.19 கோடி மதிப்பில் சம்பா சிறப்பு தொகுப்பு திட்டத்தை அறிவித்தார். அந்த திட்டம் காரணமாக நெல் உற்பத்தி அதிகரித் தது. அதேபோல 2013-2014-ம் ஆண்டில் குறுவை சாகுபடியை ஊக்குவிக்கும் விதமாக குறுவை சிறப்பு தொகுப்பு திட்டத்தை அறிவித்து செயல் படுத்தி உள்ளார். இந்த திட்டத்தின்படி தண்ணீர் குழாய்கள் 100 சதவீதம் மானியத்தில் 7 ஆயிரம் விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. சமுதாய நாற்றங்கால் அமைக் கவும் 100 சதவீதம் மானியம் வழங்கப்படுகிறது. இதேபோல் வேளாண்மை இடுபொருட் கள், எந்திரங்கள் 100 சதவீத மானியத்தில் விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன.

24 ஆயிரம் எக்டேர்

திருவாரூர் மாவட்டத்தில் நிலத்தடி நீர் ஆதாரத்தை பயன்படுத்தி 24 ஆயிரத்து 800 எக்டேர் பரப்பில் குறுவை நெல் சாகுபடி செய்ய திட்ட மிடப்பட்டுள்ளது. அதன்படி திருவாரூர் மாவட்டத்தில் குறுவை பருவத்தில் இதுவரை திருந்திய நெல் சாகுபடி முறையில் 4 ஆயிரத்து 696 எக்டேரிலும், இயல்பான சாகுபடி முறையில் 4 ஆயிரத்து 280 எக்டேரிலும், நேரடி விதைப்பு முறையில் 328 எக்டேரிலும் என மொத்தம் 9 ஆயிரத்து 305 எக்டேர் பரப் பில் நெல் சாகுபடி செய்யப்பட் டுள்ளது. அரசின் நலத்திட்ட உதவிகளை பயன்படுத்தி விவசாயிகள் அதிக மகசூல் பெற வேண்டும். இவ்வாறு அமைச்சர் கூறி னார். நிகழ்ச்சியில் உதவி கலெக்டர் பரமசிவம், குடவாசல் ஒன்றி யக்குழு தலைவர் பாப்பா. சுப்பிர மணியன், தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்க தலைவர் குணசேகரன், வேளாண்மை உதவி இயக் குனர் தேவேந்திரன், ஒன்றிய திட்ட ஆணையர் தில்லை நட ராஜன், மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அதிகாரி நல்லதம்பி உள்பட பலர் கலந்து கொண்ட னர். முடிவில் வலங்கைமான் பேரூராட்சி மன்ற தலைவர் ஜெயபால் நன்றி கூறினார்.